பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 05 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அசாம் மாநிலத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்க தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் அயராது பாடுபடும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த, குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவு தரவுகளை பயன்படுத்துவது அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. மத்திய அரசின் திட்டப் பணிகள் மூலம் மக்கள் அதிக அளவில் பயன்பெற நிதி சேவைகளை வலுப்படுத்துமாறு நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

5. முதலாவது உலகக்கோப்பை மற்றும் ஆசியக் கோப்பை டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டிகளை இந்தியாவில் நடத்த சர்வதேச டென்னிஸ் கிரிக்கெட் கூட்டமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

அசாம் மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற ஆதரவு அளித்த வாக்காளர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா வெளியிட்ட சமூக வலைதளப் பதிவுக்கு பதிலளித்துள்ள பிரதமர், அசாமின் வளர்ச்சியை ஊக்குவிக்க பிஜேபி மற்றும் கூட்டணிக் கட்சிகள் தொடர்ந்து அயராது பாடுபடும் என்று கூறியுள்ளார்.

அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளை மக்களிடம் விளக்கிக் கூறி, இந்த வெற்றிக்காக பாடுபட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி தொண்டர்களுக்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டால் வளர்ச்சிப் பணிகள் வேகமடையும் என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

ஷில்லாங்கில் மேகாலயா மாநில சுய உதவிக் குழுவினரிடையே உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினரின் பங்களிப்பு போற்றத்தக்கது என்றார்.

இதுபோன்ற குழுக்களில் அங்கம் வகிக்கும் மகளிர் திறமை வாய்ந்தவர்களாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தில் சுற்றுலா, சுரங்கம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் முதலீடு செய்ய அதிக வாய்ப்புள்ள நிலையில், பழங்குடியின மக்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்வது அவசியம் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த, குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவு தரவுகளை பயன்படுத்துவது அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து துணைநிலை ஆளுநர் திரு. கைலாசநாதன் மற்றும் அதிகாரிகளுடன் காணொலி வாயிலாக அவர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய திரு. அமித் ஷா, தேசிய தானியங்கி விரல் ரேகைப் பதிவு கண்டறிதல் நடைமுறையின்கீழ் இந்தத் தரவுகளை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினார்.

புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து புதுச்சேரி யூனியன்பிரதேச தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைவர் ஆகியோர் வாரம் ஒருமுறையும், உள்துறை அமைச்சர் 15 நாட்களுக்கு ஒருமுறையும், துணைநிலை ஆளுநர் மாதம் ஒரு முறையும் கட்டாயம் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் தமிழ் மொழியில் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்திய திரு. அமித் ஷா, தேவைப்படுவோருக்கு பிற மொழிகளில் இதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசின் திட்டப் பணிகள் மூலம் மக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் நிதி சேவைகளை மேலும் வலுப்படுத்துமாறு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வங்கி சேவை வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், ஜன்தன் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம், பிரதமரின் சூரியசக்தி மின்திட்டம், சாலையோர வியாபாரிகளுக்கான ஸ்வநிதி போன்ற திட்டப் பயனாளிகளுக்கு வங்கிகளில் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மத்திய அரசின் நிதிச் சேவைகள் துறை செயலாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

கிராமப்புறங்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் அளிப்பதில் அடல் டிஜிட்டல் சுவிதா மையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுவதால் இம்மாநிலத்தில் திட்டப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் அமிர்த சரோவர் திட்டம் உதவிகரமாக இருப்பதுடன் தண்ணீரை அதிக அளவில் சேமிக்க வழிவகை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க வழக்கமான வேளாண் சாகுபடி மட்டுமல்லாது கால்நடை வளர்ப்பு, தோட்டப் பயிர் சாகுபடி, மீன் வளர்ப்பு போன்றவற்றையும் ஊக்குவிக்குமாறு திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான வழக்கு, உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்வதற்கான குழுவில் இருந்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்பட்டதை எதிர்த்து பல்வேறு அமைப்புகள் சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டம், அரசியல் சாசனப்படி செல்லுபடியாகுமா என்பது குறித்தும் இன்றைய விசாரணையின்போது நீதிபதிகள் ஆய்வு செய்வார்கள் என தெரிகிறது.

<<<<>>>>

அரசு குடியிருப்புகள் உட்பட அனைத்து வகையான அரசாங்க கட்டடங்களிலும் மின்சார பயன்பாட்டிற்கான ப்ரீபெய்டு ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வீட்டுவசதி மற்றும் மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

மும்பையில் மேற்கு மண்டல மாநிலங்களைச் சேர்ந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் பணி வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிவடையும் என்றார்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இந்த ஸ்மார்ட் மீட்டர்கள் மூலம் மின்சார பயன்பாடு குறித்த பல்வேறு தகவல்களை நுகர்வோர் அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்க எதிர்காலத்திற்கு ஏற்ற நவீன மற்றும் குறைந்த செலவிலான எரிசக்தி பயன்பாடு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கென சிறப்பு மண்டலங்களை உருவாக்க வேண்டும் என்றும் திரு. மனோகர்லால் வலியுறுத்தினார்.

<<<<>>>>

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. பூஷன் ராமகிருஷ்ண கவாய் இன்று பதவியேற்கிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இதுவரை தலைமை நீதிபதியாக இருந்த திரு. சஞ்சீவ் கண்ணா நேற்றுடன் பணி ஓய்வு பெற்றதையடுத்து, திரு. கவாய், புதிய தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க உள்ளார்.

<<<<>>>>

ஆண்டுதோறும் செப்டம்பர் 23ஆம் தேதி ஆயுர்வேத தினமாக கொண்டாடப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆயுர்வேத மருத்துவத்தை உலகளவில் பிரபலப்படுத்தும் நோக்கில் இதற்கான அறிவிப்பை மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

செப்டம்பர் 23ஆம் தேதி பகல் பொழுதும், இரவுப் பொழுதும் சம அளவில் இருக்கும் என்பதால், மனித உடல் செயல்பாடுகள் மற்றும் ஆரோக்கியத்தில் சமநிலையைப் பராமரிக்க உதவும் ஆயுர்வேத மருத்துவத்தை போற்றும் வகையில் இந்நாள் ஆயுர்வேத தினமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது என்று ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விவசாயிகளுக்கான பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டம், தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 20வது தவணைத் தொகையைப் பெற விரும்பும் விவசாயிகள், தங்களது நில உடைமை ஆவணங்களைப் பதிவு செய்வது அவசியம் என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் திரு. ஸ்டீஃபன் ஜெயகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவை வளாகத்தை பாரம்பரியம் மற்றும் கலாச்சார மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை தில்லி சட்டப்பேரவைத் தலைவர் திரு. விஜேந்தர் குப்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில், 1912ஆம் ஆண்டு கட்டப்பட்ட தில்லி சட்டப்பேரவைக் கட்டடம் நாட்டின் சட்டப்பேரவை மற்றும் அரசியல் வரலாற்றின் அடையாளமாக திகழ்கிறது என தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்பை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் இந்த வளகாத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்

<<<<>>>>

முதலாவது உலகக்கோப்பை மற்றும் ஆசியக் கோப்பை டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டிகளை இந்தியாவில் நடத்த சர்வதேச டென்னிஸ் கிரிக்கெட் கூட்டமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

-------------

பாங்காக்கில் நடைபெற்று வரும் தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென், ப்ரியான்ஷு ரஜாவத், மால்விகா பன்சோட், உனாட்டி ஹூடா, மகளிர் இரட்டையர் பிரிவில் காயத்ரி கோபிசந்த் - த்ரிஷா ஜோலி இணை இன்று பிரதான சுற்று ஆட்டங்களில் பங்கேற்கின்றனர்.

-------------

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் 64 கிலோ எடைப்பிரிவில் நிருபமா தேவி 4வது இடத்தையும், ஆடவர் 96 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தில்பக் சிங் 9வது இடத்தையும் பெற்றனர்.

**<<<<The End>>>>**